**71 படங்கள்: இப்படி பிள்ளைகள் கதைப்பதற்கு கற்றுக்கொள்கிறார்கள்**
www.kinder-4.ch
இவ் இணையத்தளத்தில் பல படங்களைக் காணலாம்.
இப்படங்கள், பிள்ளைகள் எப்படி உரையாடுகிறார்கள் எனவும், அத்துடன் உங்கள் பிள்ளைகளுக்கு, நீங்கள் எவ்வாறான ஆதரவை, வழங்கலாம் எனவும் எடுத்துக் காட்டுகிறது.
உங்கள் பிள்ளைகளுடன் எப்போதும் எல்லா இடங்களிலும் கதையுங்கள்.

**புத்தகங்கள் வாசித்தல், சிறுவர்பாடல்கள் படித்தல்**

www.interbiblio.ch
சுவிஸ் பல கலாச்சார வாசிகசாலைகள்.
இங்கு பல கலாச்சாரத்தை சேர்ந்தவர்களுக்காக பல மொழிகளில் புத்தகங்கள் உள்ளன.
உங்கள் அருகில் இருக்கும் வாசிகசாலையை இந்த அட்டையில் காணலாம்.

www.vers-und-reim.net
இங்கு பல மொழிகளில் பல கலாச்சாரத்தை சேர்ந்தவர்களுக்கான சிறுவர் பாடல்களைக் காணலாம்: உதாரணம்:
En ten tini, savaraka tini, savaraka tika taka, bija, baja, buf, trif, traf, truf!

www.buchstart.ch
Buchstart (வாசிப்பதால் பயனடைவோம்) –
சிறு பிள்ளைகளுடன் புத்தகங்கள் பார்த்தல்

www.sikjm.ch
Schenk mir eine Geschichte (எனக்கு ஒரு கதையை பரிசளியுங்கள்) –
பல மொழிகளில் கதைகள்

**உங்களிடம் கேள்விகள் உள்ளதா?**
உங்களின் குடும்ப மையத்துக்கோ, நூல்நிலையத்துக்கோ வருகை தாருங்கள்.
இல்லையேல் உங்கள் கெமெய்ண்டெயின் தந்தையர் தாய்மார் ஆலோசைகூடத்தை நாடுங்கள். நிபுணர்த்துவம் வாய்ந்தவர்கள் உங்களுக்கு உதவ காத்திருக்கிறார்கள்.
எங்களுடன் தொடர்புகொள்ள: www.fruehefoerderung.bl.ch
மின்னஞ்சல்: fruehefoerderung@bl.ch

---


**Pädagogische Hochschule Thurgau.**
*Lehre Weiterbildung Forschung*

Bildungsdirektion Kanton Zürich

ஆக்கம் குடும்ப நிபுணத்துவப்பிரிவு SID மற்றும் தொழிற்கல்வி, மத்திய, உயர்கல்வி BKSD சேவைப்பிரிவுகளின் கூட்டுப்பணி

KIP
KANTONALES INTEGRATIONSPROGRAMM
KANTON BASEL-LANDSCHAFT


BASEL LANDSCHAFT

# பிள்ளைகள் உரையாட விரும்புகிறார்கள். மொழி முக்கியமானது. இப்படி நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு உதவலாம்.

**பெற்றோர் மற்றும்**



## ஆரம்பத்தில் இருந்தே பிள்ளைகளுக்கு மொழி ஏன் முக்கியம் வாய்ந்தது?

**பிள்ளைகளுக்கு எப்போதும் எல்லா இடங்களிலும் மொழி தேவைப்படுகிறது.**
**அவர்கள் குடும்பத்தினருடன் உரையாடுகிறார்கள்.**
**அவர்கள் சக பிள்ளைகளுடன் உரையாடுகிறார்கள் மற்றும் விளையாடுகிறார்கள்.**

**எதிர்காலத்திலும் மொழி முக்கியமானது.**
**பாடசாலையிலும் வேலை செய்யும் போதும்.**

**அதனால் தான் வாழ்க்கையின் முதல் வருடங்கள் மிக முக்கியமானது.**
**பிள்ளைகளுக்கு ஆதரவாக இருங்கள்.**

## நீங்கள் என்ன செய்யலாம்?

**1. உங்கள் பிள்ளைகளுடன் அடிக்கடி உரையாடுங்கள்.**
பெரியவர்களுடனான உரையாடல் பிள்ளைகளுக்கு தேவை.
ஆகையால் பிள்ளைகளுடன் அடிக்கடி மற்றும் எல்லா இடத்திலும் கதையுங்கள்.
உதாரணமாக: பொருட்கள் வாங்கும் போது, சாப்பிடும் போது, புகையிரதத்தில்.
நீண்ட நேரக் கலந்துரையாடலுக்கும் நேரத்தை ஒதுக்குங்கள்.
உரையாடும் போது பிழைவிடுவது தவறில்லை.
முக்கியம் என்னவெனில்: நீங்கள் ஒருவரையொருவர் புரிந்து கொள்ளல் வேண்டும்.

**2. உங்கள் பிள்ளைகளை மற்ற பிள்ளைகளுடன் உரையாட விடுங்கள்.**
பிள்ளைகள் விளையாடும் போது பல விடயங்களையும் அத்துடன் கதைக்கவும் கற்றுக் கொள்ளுகிறார்கள்.
ஆகையால்தான் பிள்ளைகளுக்கு மற்ற பிள்ளைகளுடன் தொடர்பு தேவை.
உங்கள் பிள்ளைகளை மற்ற பிள்ளைகளுடன் விளையாட விடுங்கள்.
உங்கள் பிள்ளைகளுக்கு விளையாடுவதற்கும் கற்பதற்கும் நேரத்தை வழங்குங்கள்.

**3. உங்கள் பிள்ளைகள் சொல்வதை உன்னிப்பாக கேளுங்கள்.**
பபிள்ளைகள் எமக்கு ஏதாவது சொல்ல விரும்புவார்கள்.
ஆகையினால்தான், அவர்கள் எம்முடன் மிகவும் கதைக்க விரும்புகிறார்கள்.
உங்கள் பிள்ளைகளுக்கு கதைப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்.
உங்கள் பிள்ளைகள் கதைப்பதைக் நீங்கள் நன்றாக கேளுங்கள்.
ஆர்வத்தை காட்டுங்கள் மற்றும் கேள்விகள் கேளுங்கள்.
இப்படி, உங்கள் பிள்ளைகளை உங்களால் நன்கு புரிந்து கொள்ள முடியும்.

**4. எல்லாவற்றிற்கும் மொழியைப் பயன்படுத்துங்கள்.**
மொழியூடாக பல விடயங்களை செய்யலாம். உதாரணமாக:
ஏதாவது சொல்லல், ஒரு கதையை கண்டுபிடிப்பதல், உலக நடப்புக்களை விளக்குதல்.
பிள்ளைகளுக்கு ஆர்வமுள்ள விடயங்கள் பற்றிக் கதையுங்கள்.
உணர்வுகளை பற்றியும் கதையுங்கள்.
அதற்காக நேரத்தை ஒதுக்குங்கள்.
நீண்ட கலந்துரையாடல் உங்கள் பிள்ளைக்கு பயனுள்ளதாக இருக்கும்.

**5. உங்கள் பிள்ளைகளுக்கு எழுத்தில் இருப்பதை விளக்குங்கள்.**
எல்லா இடங்களிலும் எழுத்துக்கள், எண்கள் மற்றும் படங்கள் உள்ளன:
புத்தகங்களில், தொலைபேசியில், தொலைக்காட்சியில், விபரிப்பு பலகையில்.
அதில் உள்ளவற்றை உங்கள் பிள்ளைகளுக்கு விளக்குங்கள்.
பிள்ளைகளுடன் இணைந்து சிறுவர் படங்கள், மற்றும் புத்தகங்களைப் பாருங்கள்.
அவை பற்றி பிள்ளைகளுடன் உரையாடுங்கள்.
பின்பு அவை பிள்ளைகளுக்கு பாடசாலையிலும், நவீன தொழில் நுட்ப உலகிலும் உதவியாக இருக்கும்.

**6. உங்கள் தாய் மொழியில் உரையாடுங்கள்.**
வீட்டில் உங்கள் பிள்ளைகளுடன் தாய்மொழியில் உரையாடுங்கள்.
உங்கள் பிள்ளைகள் பராமரிப்பு இடம் மற்றும் பாலர் விளையாட்டுக் குழுவில் டொச் மொழி கதைப்பார்கள்.
இவ்வாறு பிள்ளைகள் இரு மொழிகளைக் கற்றுக் கொள்கிறார்கள்.
இது உங்கள் பிள்ளைக்கு கிடைத்த பெரிய வாய்ப்பாகும்.
இது பின்பு பாலர் பாடசாலை மற்றும் பாடசாலைக்கு செல்லும் போதும் உதவுகிறது.
உங்கள் பிள்ளைகளை ஆரம்பத்திலேயே டொச் மொழி பேசும் பிள்ளைகளுடன் விளையாட விடுங்கள்.
உங்கள் பிள்ளைகளுடன் நீங்கள் தாய் மொழியில் உரையாடுங்கள்.



